DEPOSITION OF WITNESS
Judicial Form No. 53
(See Rule 42)
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 58/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜீவிதா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.10.2024.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் குடியிருப்பது தோட்டத்து சாலை என்றால் சரிதான். அங்கிருந்து ஊரு'க்கு போக எவ்வளவு தூரம் என்றால் 1 கி.மீ. மெயின்ரோட்டில் இருந்து 200 மீட்டர் தூரம் மண் பாதையில் சென்று வீட்டை அடைய முடியும் என்றால் சரிதான். தன்னாசியப்பன் கோவிலில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 250 மீட்டர். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் கால கட்டத்தில் 10 ம் வகுப்பு படித்து வந்திர்கள் என்றால் ஆம். காலை 9.30 – 7.00 மணி வரை சிறப்பு வகுப்பு நடைபெறும் என்றால் சரிதான். அன்றைய தினம் revission Test பள்ளி விடுமுறை என்பதால் செல்லவில்லை. போலிசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 19.09.2018 ம் தேதி சுமார் காலை 9.00 மணிக்கு அரசு மருத்துவமனையில் வைத்து. போலிசார் விசாரிக்கும்போது revission Test என்பதால் அன்றை

தினம் பற்றி செல்லவில்லை என்பதை கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது உங்கள் தகப்பனாரின் தந்தைக்கு என்னை வயது என்றால் 78. அவர் வெளியில் எங்கும் செல்லமாட்டார் என்றால் சரிதான். கோவிலில் இருந்து வீட்டிற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 5 நிமிடம்.

2. சத்தம்கேட்டு சென்றபோது உங்கள் அப்பா எந்த திசையை பார்த்து விழுந்துகிடந்தார் என்றால் தெரியாது. சத்தம்கேட்டு சென்றபோது நடந்து முடிந்துவிட்டது'என்றால் இல்லை நடந்து கொண்டிருந்தது. குறிப்பாக யார் யார் உங்களை அப்பாவை உதைத்தார் என்று தெரியாது என்றால் யார் உதைத்தார் என்று தெரியும் எங்கு உதைத்தார் என்று தெரியாது. நீங்கள் செல்லும்போது உங்கள் அம்மா அங்கிருந்தாரா என்றால் ஆம். அவர் தடுத்துக்கொண்டிருந்தாரா என்றால் அடிக்காதிங்க என்று சொல்லிக்கொண்டிருந்தார். எதிரிகள், உங்கள் அம்மாவை தவிர யாரும் இல்லையா என்றால் சரிதான்.

3. நீங்கள் போன பின்னிட்டு இந்த சம்பவத்தை தடுக்க முயற்ச்சி செய்திர்களா என்றால் முயற்ச்சி செய்தோம். அவ்வாறு தடுக்க முயற்ச்சி செய்திருந்தால் உங்களுக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் அவர்களை எங்களை ஒன்றும் செய்யவில்லை. உங்கள் அப்பாவிற்கு ரத்தம் வந்து அது துணி மணி எல்லாம் வழித்தது என்றால் ஆம். அடுத்த நாள் உங்கள் அப்பா போட்டிருந்த துணிமணிகளை போலிசா◌ரை கைப்பற்றினார்களா என்றால் கேட்கவில்லை. பால் ஊற்ற உங்கள்அம்மா., அப்பா இருவரும் செல்வார்களா என்றால் ஜாமான் வாங்குவதற்காக அம்மாவும் செல்வார்.

4. உங்கள் அப்பாவின் சொந்த தம்பி குணசேகரன் என்றாலும் அவரது மனைவி பெயர் ராஜலட்சுமி என்றால் சரிதான். அவர்கள் இருவரும் எதிரிகள் வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். உங்கள் அப்பா, அவரது தம்பி மற்றும் மனைவி மீதுசிவில் வழக்குபோட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் அப்பா அவருடன் உடன் பிறந்த தம்பி மீது OS 453/2018 என்ற வழக்கு போட்டிருந்தார்கள் என்றாலும், அந்த வழக்கில் உங்கள் அப்பா அவருடைய பூமிக்குள் மூன்றாம் நபர்கள் அத்துமிறி நுழைழுந்து அவரை தாக்கி இடது கையில் எலும்பு முறிவை ஏற்படுத்தியதாகவும், இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு பிரதிவாதிகள் பூமிக்குள் உள்ளே வரக்கூடாது என உறுத்துக்கட்டளை தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி தெரியாது.

5. நீங்கள் சம்பவம் சொல்லப்பட்ட இடத்தில் நீங்கள் இல்லை என்றாலும், வயது முதிர்ந்த உங்கள் அப்பாரை அழைத்துக்கொண்டு சம்பவம் இடம் வந்து சம்பவத்தை பார்த்ததாக சொல்வது பொய் என்றால்

சரியல்ல. உங்கள் சித்தப்பா , சித்தி உங்கள் அப்பாவுடன் விரோம் கொண்டதற்கு எதிரிகள் தான் காரணம் என்று எண்ணி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மாவட்ட உரிமையல் நீதிமன்றதில் சம்பவம் உங்கள் அப்பா பூமிக்கும் நடந்ததாக கண்டுள்ள நிலையில் எதிரிகள் மீது இருந்த விரோதம் காரணமாக நடக்காத சம்பவத்தை கோவில் முன்பாக நடந்ததக சொல்லி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. 2ம் எதிரி கருப்பண்ணன் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாள், நேரத்தில் உடுமலை கோகுல் கிளினிக்கில் தோள்பட்டை சிகிச்சைக்காக சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல, அங்குதான் இருந்தார். நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.